திரு. கே. போஜன்: தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலிலே மே மாதம் வரை பரிசுச் சீட்டு விற்பனையிலே 16 கோடி அளவிற்குக் கிடைத்ததாகச் சொன்னார்கள். பரிசுத் தொகை போக, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவுகள் போக, அரசாங்கத்திற்கு மிகுதியாகக் கிடைத்திருக்கும் வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரசாங்கத்திற்கு இதன் மூலமாகக் கிடைத்திருக்கும் வருமானம் 9 கோடியே 75 இலட்சத்து 40 ஆயிரத்து 135 ரூபாய் ஆகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பரிசுச் சீட்டில் இருந்து மொத்தமாகக் கிடைத்திருக்கும் வருவாயை மாவட்ட அளவில் அபிவிருத்தி வேலைகளுக்காகப் பகிர்ந்து செலவழிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாவட்ட அளவில் என்று செலவு செய்யும் நிலை அல்ல. இதைச் சிறப்பு நிதியாக அரசாங்கக் கணக்குகளில் இருந்து தனிமைப்படுத்தி, குறிப்பிட்ட அபிவிருத்தி வேலைகளுக்கும், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கும், அரிசன மாணவர்களுக்காக உபயோகப்படுத்துவதற்கும் தனிக் கணக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம்: எல்லா மாநிலங்களிலும் பரிசுச் சீட்டுகள் வெளியிட்டாலும் கூட வேறு மாநில அதிகாரிகள் நம்முடைய ஏற்பாட்டைப் பரிசிலித்து, இது நல்ல விதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறியிருப்பதை அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எந்தப் பக்கம் என்று தெரியவில்லை. பொதுவாகத் தமிழ் நாடு அரசாங்கம் இப்படிப்பட்ட பாராட்டுக்குரிய பல சாதனைகளைக் கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாகச் செய்து வருகிறது என்பதை எல்லாப் பக்கத்தினரும் நன்றாக உணர்ந்து வருகிறார்கள்.

SECOND PAY COMMISSION.

* 8. *Q.*—THIRU K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Second Pay Commission appointed for the revision of pay scales of the Government servants has submitted its recommendations to the Government?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இல்லை.

DR. H. V. HANDE: Sir, a number of recommendations have been made by the First Pay Commission and many of them have not yet been implemented. In view of the fact that most of the recommendations of the First Pay Commission have been accepted by the previous Government—even the present Government have

1970 ஆகஸ்ட் 25]

accepted them in principle—before the report of the Second Pay Commission is finalised, will the Government come forward to see that the recommendations of the First Pay Commission which have not been implemented are fully implemented?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதல் சம்பளக் கமிஷனுக இருந்தாலும், இரண்டாவது சம்பளக் கமிஷனுக இருந்தாலும் அரசாங்கம் அந்தப் பரிந்துரைகளில் எது எது அவசியமோ, சாத்தியக்கூறுனதோ அவற்றை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி : ஊதியக் குழு தன் பரிந்துரைகளை இவ்வளவு காலத்திற்குள்ளாக அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று வரையறுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இன்ன காலவரையறைக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கூற வில்லை. விரைவாக, சிக்கிரமாக, பணிகளைச் செய்வதற்கு எவ்வளவு காலம் வேண்டுமோ, அந்தக் காலத்திற்கு அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் அனுப்ப வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இரண்டாவது ஊதியக்குழுவினுடைய பரிந்துரைகளின் மேல் கூடுதலாக ஆக இருக்கும் செலவை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தியதா? நிதி ஆணைக் குழு இதர மாநிலங்களைப் பொருத்த வரை இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பதை எடுத்துக் காட்டி நம்முடைய சர்க்காரும் அந்தத் தொகையைப் பெற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மத்திய அரசாங்கம் நமக்குச் செய்திருக்கிற பாரபட்சமான நிலையை இது குறிப்பதாகும். ஐந்தாவது நிதி ஆணைக் குழு பரிந்துரை வழங்குவதற்கு முன்னுல் சில மாநிலங்களில் சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன, சில மாநிலங்களில் சம்பளக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டிருந்தன. ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கையில் வேறு பல மாநிலங்களுக்கு இந்தச் செலவை ஈடுகட்டும் வகையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தும் நம்முடைய மாநிலத்திற்கு அத்தகைய பரிந்துரையைச் செய்யவில்லை. இதைப்பற்றி நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் நடைபெற்றிருக்கிற அமைச்சர்கள் மாநாட்டிலும், திட்டக் கமிஷனிடத்திலும், பிரதம மந்திரி அவர்களிடத்திலும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறுர்கள். நேற்றைய முன் தினம்கூட, சம்பளக் கமிஷன் இங்கே நியமித்து பரிந்துரைகள் வரவில்லை என்ற காரணத்திற்காக சேர வேண்டிய மிகப் பெரிய தொகையைக் கொடுக்காமல் இருக்கக்கூடாது என்பதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறுர்கள்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : ஊதியக் குழுவின் பரிந்துரை வர காலதாமதம் ஆகிற காரணத்தால், விலைவாசி ஏற்றம் காரணமாக அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இடைக்கால ஏற்பாடு எதையாவது அரசு செய்யுமா? இடைக்கால நிவாரணமாக அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை அரசாங்கம் பாராட்டுகிறது. இடைக்கால நிவாரணம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பளக் கமிஷன் ஒரு பக்கம் நியமிக்கப்பட்டிருந்தாலும், இடையிலே மலைப் பகுதியில் வேலை பார்க்கின்றவர்களுக்கான அலவன்ஸைக் கூட்டிக் கொடுத்திருக்கிறோம். நான்கு கோடி ரூபாய் அளவுக்கு மின்சார வாரிய ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கும் வகையில் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சம்பளக் கமிஷன் வேலை சிக்கலான, பொறுப்பான வேலை எவ்வளவு விரைவாக அவர்களுடைய பரிந்துரைகளை அளிக்க வேண்டுமோ, அவ்வாறு அளிப்பார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது.

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister has stated that the Commission would submit the report as expeditiously as possible. May I request him to give an assurance that at least the report of the Pay Commission will come before 1972 elections?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பளக் கமிஷன் அறிக்கை வரக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு இந்தச் சர்க்கார் ஊழியர்களிடத்தில் அக்கறை இருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்களுடைய ஆசையை நிராசையாகக் கண்டிப்பாக இந்த அரசாங்கம் செய்யும்.

Cash awards for Government Servants.

*1 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Tamil Nadu Government has instituted a scheme of giving cash awards for suggestions emanating from Government Servants for improvements in office and administrative procedure?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். அலுவலக நடைமுறையையும், நிர்வாக நடைமுறையையும் சீரமைப்பது குறித்து அரசுப் பணியாளர்கள் அளிக்கும் ஆலோசனைகளுக்கு ரொக்கப் பரிசுகள் அளிப்பதற்கு வகை செய்யும் திட்டம் ஒன்றைத் தொடங்குவது குறித்து பொதுத் (பணிகள்- A) துறையின் 11-11-1968 நாளிட்ட 2773-ம் எண் அரசு ஆணையில் தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டம் இந்த ஆணையின் நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு செயலில் இருக்கும்.